மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 16—3—1984 காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7·41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

123. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1980-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை (ஆங்கிலம்). [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் I/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

124. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1981-ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை (ஆங்கிலம்). [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் I/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

50. கோரிக்கை எண். 17—தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு—1984-85 (தமிழ், ஆங்கிலம்)

51. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி பற்றிய செயல் முறைத் திட்டம்—1984-85 (ஆங்கிலம்).

52. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (மூன்றாம் பட்டியல்).

இணைப்பு

(109 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண். 17—கல்வி.

I. தோற்றுவாய்.

கல்விச் செலவும் மாநில வரவுசெலவுத் திட்டமும்.

கல்விக்காக 1984-85 ஆம் ஆண்டில் "மானியக் கோரிக்கை 17—கல்வி" ன் கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 402 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,946 கோடியில் 21 விழுக்காடாகும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS